

சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆலோசனைப்படி கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் ஆத்தூர் ஒன்றியம் சார்பில் கல்பகனூர் ஊராட்சியில் மாபெரும் கபடி போட்டி நடைபெற்றது. இதில் போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு மாவட்டப் பொருளாளர் ஆர்.வி.ஸ்ரீராம் ,ஆத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளர் டாக்டர் வே.செழியன், ஆகியோர் பரிசையும், கோப்பையும் வழங்கினார்.இதில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் ஆவின் செல்வமணி, லட்சுமண பெருமாள், முனைவர் தங்கபாண்டியன், மதியழகன், ரமேஷ் பாபு, செல்வகுமார், விஜயகுமார், கிருஷ்ணகுமார், ஒன்றிய நிர்வாகிகள் தங்கராசு, செல்வம் ,இளங்கோ, பெருமாள், செந்தில்குமார், லோகநாதன், சதீஷ்குமார், கண்ணையன் ,சிவ பெருமாள், பழனிசாமி, மதியழகன், சுப்பிரமணி, தர்மலிங்கம், துரைசாமி, முருகன், சந்திரன், அண்ணா துரை, கிருஷ்ணன்,செல்வம், புதூர் லோகநாதன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமை!

# சேலத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப் போட்டி!

## வழக்கறிஞர் கே.எஸ்.இரவிச்சந்திரன் - முன்னணியினர் பங்கேற்பு!

சேலம், அக். 19 - தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான 3வது மண்டல பேச்சு போட்டி கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் சேலம் சட்டக் கல்லூரியில் சனிக்கிழமை 14.10.2023 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை இணை செயலாளர்கள் கே.எஸ். இரவிச்சந்திரன், ராதாகிருஷ்ணன், அருள்மொழி, கே.எம்.தண்டபாணி, தாமரை செல்வன்; துணை செயலாளர் பச்சையப்பன் தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சரவணன், கவிகணேசன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

இப்போட்டிக்குத் தலைமைக் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான், வழக்கறிஞர் நன்மாறன் ஆகியோர் நடுவர்களாகக் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் முதல் பரிசு பெற்ற சேலம் அரசு சட்டக் கல்லூரி மாணவர் கோபாலகிருஷ்ணனுக்கு ரூபாய் 50,000/ தங்கப் பதக்கம், சான்றிதழ்;

இரண்டாம் பரிசு பெற்ற கோவை அரசு சட்டக் கல்லூரி மாணவி சினேகாவிற்கு ரூபாய் 25,000/ வெள்ளிப்பதக்கம், சான்றிதழ்;

மூன்றாம் பரிசு பெற்ற சேலம் மத்திய சட்டக் கல்லூரி மாணவர் முஹம்மது ரித்திக்குக்கு ரூபாய் 15,000/தாமிரப் பதக்கம், சான்றிதழ்;

ஆறுதல் பரிசு பெற்ற நாமக்கல் அரசு சட்டக் கல்லூரி மாணவி ஞானிதாவுக்கும், தர்மபுரி அரசு சட்டக் கல்லூரி மாணவர் ஆண்டனி ஜேம்ஸ்க்கு தலா ரூபாய் 5,000/ வெண்கலப் பதக்கம், சான்றிதழும் மற்றும் கலந்து கொண்ட மாணவர்களுக்குப் பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இப்பேச்சு போட்டியில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற சட்டக் கல்லூரி மாணவர்கள் டிசம்பர் 6 அன்று சென்னையில் நடைபெறவுள்ள மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்வார்கள்.

### திருவாரூர் மாவட்ட

# இலக்கிய அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## பாட்டுமன்றம் -கவியரங்கம் -கருத்தரங்கம்!

திருவாரூர், அக். 19 - திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிறப்பு பாட்டுமன்றம், கருத்தரங்கம், கவியரங்கம் நடைபெறுகிறது. அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதி எ.கே.எஸ்.விஜயன் , மாநில இளைஞர் அணி செயலாளர் ந.இளையராஜா ஆகியோர் பங்கேற்று சிற ப்பிக்கின்றனர்.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூறாண்டு விழாவை முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் ஆலோசனைகளின் படி திருவாரூர் மாவட்ட உள்ளடக்கிய திருவாரூர் மற்றும் நன்னிலம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் கருத்தரங்கம் மற்றும் நடைபெற்று முடிந்த நிலையில், திருத்துறை பூண்டி சட்டமன்ற தொகுதியில் பாட்டுமன்றம் , கருத்தரங்கம் மற்றும் கவியரங்கம் உள்ளிட்ட நிகழ்சிகள் 21.10.2023 சனிக்கிழமை மாலை நடைபெற இருக்கிறது. மாவட்ட செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ.தலைமை ஏற்க, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ்.பாண்டியன், ப.ஆடலரசன் ஆகியோர் தொடக்க உரையாற்றுகின்றனர். இந்த நிகழ்வில் தொழில்முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா,தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதி எ.கே.எஸ்.விஜயன், மாநில இளைஞர் அணி செயலாளர் ந.இளையராஜா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

தொலைக்காட்சி புகழ் பேராசிரியர் கோ.பழனி தலைமையில் "அன்றும்... இன்றும்... என்றும்... கலைஞர்" எனும் தலைப்பில் பாட்டுமன்றத்தில் மணப்பறை லலிதா பரமேஸ்வரி , காரைக்கால் யோகதர்ஷினி ,மாஸ்டர் அன்னவாசல் டி.டி.தேவதர்ஷன், ஆகியோர் பங்கேற்கின்றனர். தலைமைக்கழகப்பேச்சாளர் சோம . இளங்கோவன் , தெ.தியாகராஜன் ஆகியோர் பங்கேற்கும் கருத்தரங்கமும், கவிஞர் க.தங்கபாபு, கவிஞர் இள.செல்வமணி ஆகியோர் பங்கற்கும் கவியரங்கமும் நடைபெற இருக்கிறது.

மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு , மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ். கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் பிரகாஷ், பால.ஞானவேல், வீ.எஸ். ஆர்.தேவதாஸ், இரா. மனோகரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் செல்வஜெயதேவன், கலைவாணி மோகன் , இலக்கிய அணி நிர்வாகிகள் டி.எஸ். அண்ணாதாசன், தெ.தியாகராஜன், புலவர் எண்கண். சா.மணி , ஜாகிர் உசேன் , தங்க குணசேகரன், நல்லாசிரியர் செல்லத்துரை , சோமசுந்தரம், பாலமுத்து உள்ளிட்ட நிர்வாகிகளும் , மாவட்ட ,ஒன்றிய ,நகர , பேரூர் கழக செயலாளர்களும், சார்பு அணிகளின் அமைப்பாளர்களும் , கழக தோழர்களும்,பொதுமக்களும் பெருந்திரளாக பங்கேற்கவிருக்கின்றனர்.

### ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன் தலைமை!

# வேளாங்கண்ணி பேரூராட்சியில் ரூ.48 லட்சத்தில் பள்ளி மற்றும் நியாய விலை கட்டிடம்!

## என்.கௌதமன், ஜானிடாம்வர்கீஸ், நாகை மாலி திறந்து வைத்தனர்!

நாகை, அக்.19 - நாகை மாவட்டம் வேளாங்கண்ணியில் சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து வேளாங்கண்ணி பேரூராட்சியில் 1984ம் ஆண்டு தொடங்கப்பட்டு 39ஆண்டுகள் சிறப்பாக இயங்கி வரும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ.33.40 மதிப்பிலான புதிதாக கட்டப்பட்டுள்ள மூன்று வகுப்பறை கட்டடங்கள், ரூ. 15 லட்சம் மதிப்பில் வேளாங்கண்ணி கடற்கரையில் மீனவ கிராம மக்களுக்காக ரூ.15 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலை கடை கட்டிட திறப்பு விழா நடைபெற்றது.

ஒன்றிய ஆத்மாகுழு தலைவரும், வேளாங்கண்ணி பேரூராட்சி துணைத்தலைவர் ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன் தலைமை தாங்கினார். வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் டயானாஷர்மிளா, கீழையூர் ஒன்றியக் குழுத் தலைவர் செல்வராணிஞானசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆத்தமா குழு உறுப்பினரும், வேளாங்கண்ணி பேரூர் செயலாளருமான மரியசார்லஸ் வரவேற்றார். புதிய கட்டிடங்களை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜானிடாம்வர்கீஸ், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி ஆகியோர் திறந்து வைத்தனர். நிகழ்ச்சியில் கீழையூர் ஒன்றியக் கழகச் செயலாளரும், வேளாங்கண்ணி பேரூராட்சி துணைத்தலைவர் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், மாவட்ட துணை ஆட்சியர் ரஞ்சித்சிங், வேளாங்கண்ணி பேரூர்செயலாளர் மாவட்ட பிரதிநிதி மு.ப.ஞானசேகரன், கூட்டுறவு சங்க மண்டல துணைப் பதிவாளர் பன்னீர்செல்வம், கூட்டுறவு சங்க மண்டல துணைப் பதிவாளர் பன்னீர்செல்வம், வேளாங்கண்ணி பேரூர் கழக நிர்வாகிகள் கந்தையன், மரியசூசைநிக்சன், சார்லஸ். பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் வெற்றிவேல், ஜெயனட்அலக்ஸ், சுமதிபாண்டியன், சித்திரா, தையல்நாயகி, வின்சியா, சத்தியாவீரமணி, சசிரேகா, கவிதா ஒன்றிய பொறியாளர் அணி ஒருங்கிணைப்பாளர் ஆனந்த் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.


**கோயம்புத்தூர் மாநகராட்சி**

கலைஞர் 100 1924 - 2023

பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். (e) 71/2023 நாள். 17.10.2023

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 7,8,9,11,25, 27,28,43,50,56,57,58, 59,60,61,62,68,69, 70க்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 23 பணி | 07.11.2023 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 08.11.2023 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் –1, தொலைபேசி எண். 0422 2396026. Email: commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 559/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 17.10.2023




தருமபுரி மேற்கு மாவட்டம்,அரூர் பேரூர் கழகம் சார்பில் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம் அரூர் பேரூர் கழகச் செயலாளர் முல்லைரவி ஏற்பாட்டில் தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட துணை செயலாளர்கள் கிருஷ்ண குமார், ராஜகுமாரி, ஒன்றியச் செயலாளர்கள் வேடம்மாள்,சௌந்திரராசு,அரூர் பேரூராட்சி தலைவர் இந்திராணி, துணைத்தலைவர் சூர்யா தனபால்,ஐ.டி.விங் தமிழழகன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# பா.ஜ.க போராட்ட நாடகங்கள் ஊரை ஏமாற்றவா?

தமிழகத்திற்கு காவிரி நீரைப் பெற்றுத்தர வக்கற்ற இந்தியாவை ஆளும் ஒன்றிய பா.ஜ.க. அரசை நடத்திவரும் சர்வாதிகாரப் போக்கைக் கொண்ட பிரதமர் நரேந்திர மோடியை வலியுறுத்தாமல் பா.ஜ.க.வின் சார்பாக கழக அரசைக் கண்டித்து கும்பகோணத்தில் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக சுடாத துப்பாக்கியை வைத்துக் கொண்டு சுட்டுவிடுவேன், சுட்டு விடுவேன் என்று அ.தி.மு.க. வினரை மிரட்டுவதைப் போல் தி.மு.க. அரசை மிரட்டப் பார்க்கிறார் அரசியல் சாதுர்யமில்லாத அண்ணாமலை.

தமிழ்நாடு முழுவதும் நடைபயணம் மேற்கொண்டார். அவரது நடைபயணத்தைப் பற்றி பா.ஜ.க.வைச் சேர்ந்த சிலரே இது நடைபயணம் அல்ல கேரவன் பயணம் என்றனர். அன்றைக்கு பா.ஜ.க.விற்கு தோழமையாக இருந்த கட்சியினரோ ஒரு நாளைக்கு ஒன்றரை அல்லது இரண்டு கி.மீ.தான் நடக்கிறார் மற்ற நேரமெல்லாம் வாகனப் பயணம் தான் என்று அவரது நடைபயணத்தைப் பற்றி நாவாடல் புரிந்தனர். பத்திரிக்கைகள் பலவும் அப்படியே படம் பிடித்துக் காட்டினர். தி.மு.க வினர் யாரும் அவரைப் பொருட்படுத்தவே இல்லை. கழகப் பத்திரிக்கையிலும் அவரது நடைபயணத்தைப் பற்றி விமர்சித்து எழுதவில்லை.

வர இருக்கின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தல் தி.மு.கவிற்கும் பா.ஜ.க.விற்கும் தான் என்று ஜோக் அடித்து சிறு பிள்ளைகளின் கண்ணாமூச்சி விளையாட்டையெல்லாம் நடத்தினார். இதைக் கேட்டு அ.தி.மு.க.வினர் அண்ணாமலையின் அறிவாற்றலைப் பற்றி அங்கலாய்த்தது அரங்கேறிய தனிக்கதை.

நடைபயணம் மேற்கொண்ட அரசியல் வாதிகளெல்லாம் கால்கள் புண்ணாகி இரத்தம் ஒழுக ஒழுக அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர் நடக்க வேண்டாம் நிறுத்திக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்ட போதும் மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரை நீதி கேட்டு நெடும் பயணம் மேற்கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் ஆக முடியாது?

1938ல் திருச்சியிலிருந்து இந்தித் திணிப்பை எதிர்த்து ஆவேசமாக இராமமிர்தம் அம்மையார் உட்பட பல பெண்களோடு சென்னை வரை முழக்கமிட்டு ஆங்காங்கே அனல்கக்கும் பேச்சால் மக்களிடையே இந்தி எதிர்ப்பு உணர்வை தூண்டி விட்டுக் கொண்டே வந்தாரே பட்டுக்கோட்டை அஞ்சா செஞ்சன், அக்னி வார்த்தைகளின் பிறப்பிடம் அழகிரிசாமி ஆகிடவும் முடியாது.

ஒற்றுமை யாத்திரை என்று இந்தியாவின் குமரி முனையில் கழகத் தலைவர் மோடி ஆட்சிக்கு முடிவுரை எழுதப் போகும் இந்தியா கூட்டணிக்கு வித்திட்ட தளபதி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு காஷ்மீரில் முடித்த ராகுல் காந்தியும் ஆகி விட முடியாது.

இப்போது உண்ணாவிரதம் இருக்கப் போகிறார்களாம்! அதுவும் தி.மு.க அரசை கண்டித்தாம்! என்னே வேடிக்கை! படுத்திருக்கும் சிங்கத்தின் வாலை லேசாக தொட்டு விட்டு சுண்டெலி சொன்னதாம் சிங்கத்தையே வீழ்த்தி விட்டேன் என்று. அதைப்போல கால் ஊன்ற இடமில்லை, காலுக்கும் ஊன்றி நிற்க போதுமான வலுவில்லை தமிழ்நாட்டில், இந்த நிலையில் இருக்கிற பா.ஜ.க. என்கிற சுண்டெலி ஏதோ கத்தி விட்டு போகட்டும் என்று கண்டு கொள்ளாமல் விட்டால் தி.மு.க என்ற சிங்கத்தை சீண்டிப் பார்க்கப் போராட்டம் நடத்தப் போகிறார்களாம்.

**வி.பி.கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்



காவிரி மேலாண்மை ஆணையம் தமிழகத்திற்கு கேட்ட தண்ணீர் 16000 கன அடியைக் கூட அல்ல ஆணையிட்ட வெறும் 3000 கன அடி தண்ணீரைக்கூட கர்நாடக அரசு தமிழகத்திற்குத் தரக்கூடாது என்று போராட்டம் நடத்துவது யார் பா.ஜ.க.வினர் தானே! ஒன்றிய அமைச்சராக இருக்கிற ராஜீவ் சந்திர சேகர் என்பவர் தமிழகத்திற்கு தண்ணீர் தரக்கூடாது என்று கூறுகிறாரே அவர் யார் பா.ஜ.க.காரர் தானே?

பசுவராஜ் பொம்மை மற்றும் எடியூரப்பா என்ற இரண்டு முன்னாள் கர்நாடக முதல்வர்களும் தமிழகத்தின் எல்லை வரை வந்து தமிழ்நாட்டுக்கு தண்ணீர் தரக்கூடாது என்று கர்நாடக அரசை காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவை நிறைவேற்றக் கூடாதென்று மக்களையும் அல்ல! அல்ல! தங்களது பா.ஜ.க. தொண்டர்களை தூண்டி விட்டு பந்த் இருமுறை நடத்த வைத்தனரே, அந்த இரண்டு முன்னாள் முதல்வர்களும் யார்? பா.ஜ.க. வினர் தானே!

கர்நாடக காங்கிரஸ் அரசு காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுப்படி தந்த தண்ணீரை தடுத்திடும் அளவிற்கு போராட்டத்தின் மூலம் நெருக்கடியை தந்து கொண்டிருப்பவர்கள் யார்? பா.ஜ.க. தலைவர்களும், கட்சியினரும் தானே!

கர்நாடகத்தில் காவல்துறை அதிகாரியாக இருந்து அந்த மாநில உணர்வோடு இருக்கும் அண்ணாமலையே எதற்கப்பா உண்ணாவிரதம்? முதலில் உங்கள் பிரதமர் மோடியிடம் கூறி கர்நாடகத்தில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் தரக்கூடாது என்று போராடுகிற பா.ஜ.க. வினரை போராடாமல் நிறுத்தச் சொல்லுங்கள். அது என்ன இந்திய பிரதமர் என்று எழுதாமல் உங்கள் பிரதமர் மோடி என்று எழுதியுள்ளோம் என்று கேட்கத் தோன்றுகிறதா?

ஆம்! மோடி தலைமையிலான ஒன்றிய அரசின் அமைச்சர் ஒருவரே தமிழகத்திற்கு தண்ணீர் தரக்கூடாது என்று சொன்னால் தமிழ்நாடு இந்தியாவின் அங்கம் இல்லையா? தமிழ் நாடு என்ன தனிநாடாகவா இருக்கிறது? அந்த ஒன்றிய அமைச்சரை ஏன் உங்கள் பிரதமர் மோடி இதுவரை கண்டிக்கவில்லை. அப்படி அந்த அமைச்சர் பேசியதை ஊக்குவிக்கிற பிரதமர் உங்கள் பிரதமராகத்தான் இருக்க முடியும். இந்தியா ஒருமைப்பாட்டை விரும்பும் எங்களால் எப்படி அவரை இந்தியப் பிரதமர் என்று அழைக்க முடியும்? மணிப்பூரைப் போல் தமிழகத்தைப் பார்க்க விரும்புபவர் என்றைக்கும் எங்கள் பிரதமராக ஆக முடியாது.

பிரதமராக மன்மோகன் சிங் இருக்கும் போது இதே போன்ற பிரச்சினை, கர்நாடகம் தண்ணீர் தர மறுத்த போது உடனே தலையிட்டு விநாடிக்கு 9000 கன அடி தர வேண்டும் என்று கர்நாடகத்திற்கு உத்தரவிட்டதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். உங்கள் பிரதமர் மோடி ஏன் அவ்வாறு செய்யவில்லை? தமிழ்நாட்டில் விளையும் நெல் இந்தியாவிற்கே பயன்படும் என்ற போது அந்தப் பயிர்கள் கருகிட பிரதமர் மோடி நாட்டு மக்கள் மீது அக்கறை இருந்தால் இந்நேரம் தமிழகத்திற்கு தண்ணீர் தர உத்தரவிட்டிருக்க முடியும்!

ஐ.பி.எஸ். படித்த அண்ணாமலையே முதலில் உங்கள் பிரதமர் மோடியிடம் கூறி போராடும் பா.ஜ.க.வின் மனித நேயமில்லாத மரத்துப் போனவர்களிடம் போராடாமல் நிறுத்தச் சொல்லுங்கள். பிறகு உங்கள் உண்ணாவிரத நாடகத்தை உங்கள் அரசியல் இருப்பைக் காட்டிக் கொள்ள அரங்கேற்றம் செய்யுங்கள்.

தமிழ்நாட்டிற்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டு மென்று விருதுநகர் நகரத்தில் உண்ணாவிரதம் இருக்காமல் விருதுநகர் நகரம் தாண்டித் தள்ளி தான் இருந்தார். பிறகு அவரை விருதுநகரில் உண்ணாவிரதம் இருக்க வைத்தனர். அறிஞர் அண்ணா போராடி தடுக்கப் பார்த்தார்., முடியவில்லை, ஜீவா தடுக்கப் பார்த்தார் முடியவில்லை. 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் விட்டாரே! எதற்காக? இந்த மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்கத்தான்! அப்படி உண்ணாவிரதம் இருந்து உயிர் விட்ட தியாகி சங்கரலிங்கனார் ஆகிவிட முடியாது?

அண்ணாமலையே நீங்கள் அவசரத்தில் வார்த்தைகளை அள்ளிவீசும் அரசியலில் ஒரு எல்.கே.ஜி. மாணவர். சில நாட்களுக்கு முன்பு எங்கள் சகோதரர் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதியால் டி.என்.பி.எஸ்.சி தேர்வில் குரூப் 4 தேர்வு எழுதி வெற்றி பெற முடியுமா என்றீர்களே! ஞாபகம் இருக்கிறதா?

யு.பி.எஸ்.சி மற்றும் டி.என்.பி.எஸ்.சி யைப் பற்றி அடிக்கடிப் பேசும் அண்ணாமலையே 44 வயதில் ஒருவர் குரூப் 4 தேர்வு எழுத முடியுமா? அதற்கு அனுமதி உண்டா? எல்லாம் தெரிந்தவரே உங்களால் இந்த வயதில் தேர்வு எழுத வைக்க முடியமா என்று மோடியிடம் கேட்டுச் சொல்லுங்கள். அந்த வயதில் தேர்வு எழுத முடியாது என்பதைக் கூட அறியாமல் உமக்கெல்லாம் எதற்கு சவால்? அப்படி எழுதிட அனுமதி வாங்கித் தந்தால் எங்கள் சகோதரரை தேர்வு எழுத வைப்பதைப் பற்றி நாங்களும் பரிசீலிக்கிறோம்.

தன்மானம் தான் எனக்கு முக்கியம்? அதைவிட்டு விட இந்த அண்ணாமலை என்றைக்கும் தயாரில்லை என்று ஆவேசமாக பேசினீரே! உங்களோடு உறவை முறித்துக் கொண்டோம் என்று கூறிய பிறகு அ.தி.மு.க. தலைவர்கள் உங்களை அரசியல் அறிவற்றவர் என்றார்களே அதற்கு பதில் எங்கே? எங்கே போனது உங்கள் தன் மானம்? பத்திரிக்கையாளர்கள் கேட்டால் பதில் சொல்லாமல் மேலிடம் பதில்தரும் என்று பம்முகிறீர்களே ஏன்? இதற்கு பெயரென்ன வீரமா?

உங்கள் தன்மானம் தளர்ந்து போய்விட்டதா? சுய மரியாதை சுருண்டு போய் விட்டதா? துப்பாக்கியில் தோட்டா இல்லையா? அல்லது துப்பாக்கியைத் தூக்க முடியாத அளவிற்கு உங்கள் மேலிடத்தால் காயம் பட்டு விட்டீர்களா? அ.தி.மு.க., பா.ஜ.க. உறவு முறிவு நாடகம் என்று மக்கள் பேசிக் கொள்வதில் உண்மையிருக்குமோ?

எடப்பாடியார் தி.மு.க அரசை மட்டும் தொடர்ந்து பேசுகிறார். 9 ஆண்டு கால பா.ஜ.க. அரசைப் பற்றி ஒரு வார்த்தை இன்றைய தேதி வரை பேசவில்லையே! நீங்களும் ஒன்றும் பேசாமல் மேலிடம் பதில் தரும் என்கிறீர்களே! இதற்கு பெயர் அரிதாரம் போடாத நாடகமா? அசல் உறவு முறிவா? முதலில் அண்ணாமலையே இதற்குப் பதில் சொல்லிவிட்டு பிறகு தி.மு.க அரசை எதிர்த்துப் புது காரணம் ஏதாவது கிடைக்கிறதா என்று தேடிப் பார்த்து விட்டு போராட தயாராகுங்கள்.

ஆமாம், ஒன்றிய அரசை தண்ணீர் தர வலியுறுத்தி சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்த போது எதிர்க்கட்சி மற்றும் தோழமைக் கட்சிகளெல்லாம் ஒரே மனதோடு தமிழ்நாடு அரசின் காவிரிக்கான தீர்மானத்தை ஆதரித்துப் பேச உங்கள் பா.ஜ.க. வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வானதி வெளிநடப்பு செய்தது ஏன்? இது நியாயமா? பா.ஜ.க. நோக்கமெல்லாம் கன்னடர்களும் தமிழர்களும் எப்படியாவது மோதிக் கொள்ள வேண்டும். அதை வைத்து அரசியல் செய்து கர்நாடகத்தில் சில எம்.பி. சீட்களையாவது வெல்ல வேண்டும் என்பதுதான்.

எனவே அண்ணாமலையே! உங்கள் போராட்டத்தால் ஒன்றும் நிகழப் போவதில்லை! உடனே கர்நாடகத்தில் தண்ணீர் தரக் கூடாது என்று போராடும் உங்கள் பா.ஜ.க. கட்சித் தலைவர்களை, தொண்டர்களை போராடாமல் இருக்க சொல்லி உத்தரவிட உங்கள் பிரதமர் மோடியிடம் கூறுங்கள்! உங்களிடம் கேட்க வேண்டிய கேள்விகள் நிறைய இருக்கிறது பிறகு கேட்கிறோம்.



தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான 3வது மண்டல பேச்சுப் போட்டி கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் சேலம் சட்டக் கல்லூரியில் சனிக்கிழமை 14.10.2023 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை மாநில நிர்வாகிகள், தலைமைக் கழக வழக்கறிஞர்கள் மற்றும் மாவட்ட அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர். இப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுத்தொகை, பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள்மற்றும் கலந்து கொண்ட மாணவர்களுக்குப் பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.